**PR/2018/25/T**

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

ஓகஸ்ட் 30, 2018

ஊடக அறிக்கை

## ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சரின் இலங்கை விஜயம்

ஜப்பானிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் கஸூயுகி நகானே, ஓகஸ்ற் 28ம் திகதி முதல் 30ம் திகதிவரை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டார். அவர் இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில் ரோந்துப் படகுகளை சேவையில் இணைத்துக்கொள்வதற்காக நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர உறவுகளை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத் தலைவர்களுடனான சந்திப்புக்களை நடத்தினார்.

ஜப்பானிய அரசாங்கத்தின் மானிய உதவித்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு ஜப்பான் அன்பளிப்புச் செய்துள்ள 1.8 பில்லியன் யென் ( 2.6 பில்லியன் இலங்கை ரூபா) பெறுமதியிலான இரண்டு ரோந்துப் படகுகளையும் சேவையில் இணைத்துக்கொள்ளும் நிகழ்ச்சி ஓகஸ்ற் 29ம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்றது. சுதந்திரமானதும் , திறந்ததும்,ஸ்திரமானதும் மற்றும் சுபீட்சம் நிறைந்ததுமான இந்து-பசுபிக் சமுத்திரத்தை உறுதிப்படுத்துவதற்காகவே இலங்கையின் கடற்பாதுகாப்பிற்கு ஜப்பான் ஒத்துழைப்பு வழங்கிவருவதாக இராஜாங்க அமைச்சர் நகானே சுட்டிக்காட்டினார். இலங்கை கரையோர காவற்படை கடற் பாதுகாப்புச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தும் திறனை இந்த ரோந்துப்படகுகள் மேலும் வலுப்படுத்தும் என ஜப்பான் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த ரோந்துப்படகுகளுக்கு எஸ்எல்சிஜிஎஸ் சமுத்திர ரக்ஷா என்றும் எஸ்எல்சிஜிஎஸ் சாம ரக்ஷா என்றும் கரையோர காவற்படையினரால் பெயர் சூடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது இராஜாங்க அமைச்சர் நகானே, இலங்கைப் பிரதமர் ரணில் விக்கரமசிங்க, பதில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல, பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க, மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் உதய செனவிரத்ன ஆகியோரையும் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்புக்களின் போது

கடற்பாதுகாப்பு மற்றும் புதிய ஜி7 WPS எனப்படும் பெண்கள் , சமாதானம், மற்றும்

பாதுகாப்பு இணைப்பங்களிப்பு முன்முயற்சிகள் உட்பட அபிவிருத்தி ஒத்துழைப்பு ஆகிய விடயங்களில் 'ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான விரிவான பங்களிப்பை' மேலும் பலப்படுத்துவது தொடர்பான வழிவகைகள் மற்றும் கண்ணோட்டங்களை இராஜாங்க அமைச்சர் பரிமாறிக்கொண்டார்.

பால்நிலை சமத்துவத்தில் சாதகமான மாற்றத்தை விரைவுபடுத்துதல்**,**பெண்களை வலுவூட்டுதல் **,** ˙ மற்றும் WPS ஊடாக அவர்களின் மனித உரிமைகளுக்கு மதிப்பை பெற்றுக்கொடுத்தல் அதனூடாக சமாதானத்தை அடைந்து அதனை பேணிக்காத்தல் ஆகிய நோக்கங்களை கொண்டதான ஜி7 முன்முயற்சியானது 2018 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற ஜி 7 வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. **(https://g7.gc.ca/en/g7-presidency/themes/building-peaceful-secure-world/g7-ministerial-meeting/g7-foreign-ministers-joint-communique/g7-women-peace-security-partnerships-initiative/).** WPS நிகழ்ச்சி நிரலை முன்கொண்டுசெல்கின்ற விடயத்தில் ஜப்பானுடன் இணைந்து செயற்படுவதற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்தமைக்கு இராஜாங்க அமைச்சர் நகானே பாராட்டுக்களைத் தெரிவித்துடன் ஏனைய ஜி7 அங்கத்தவர்களுடன் இணைந்துகொண்டு இந்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்தையும் இதன் போது அவர் வெளிப்படுத்தினார்.

(முற்றும்)

****************************************************************

மேலதிக விபரங்களுக்கு அரசியல் பிரிவினருடன் தொடர்புகொள்ளவும்
தொலைபேசி: 011-269-3831~3 (ext.222)